

திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாபுரம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நான்காம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் தங்கமுரளி தலைமையில் செம்மேடு ஊராட்சியில் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அருகில் பேச்சாளர் எழும்பூர் எம்.இ.தேவநிதி, வி.ஜெ.சீனிவசன், கோடுவெளி எம்.குமார், பி.ஜி.முனுசாமி, டி.பாஸ்கர், இ.சுப்பிரமணி, கே.ஜி.அன்பு, ஏ.சுப்பிரமணி, எம்.நாராயண சாமி, ஸ்ரீதர், ஆளவந்தான், தங்கராஜ், எஸ்.ஜெயராமன், ஜி.வெங்கடேசன், கே.எம்.சரத்குமார், எம்.எல்.டேவிட், காஞ்சனா முனுசாமி, ராஞ்த், கே.என்.சரத்குமார், செ.ர.சேகர், மனோகரன், காரணி சத்தியா , வி.செல்வம், வேலன், வி.நாகராஜ், கோபால், சந்திரபாபு, நடராஜன், குமார், எல்லம்மாள், மாரி, செல்வி, ராஜேஷ், சுமன், ரவி, முருகம்மாள், நடராஜன் உள்பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் நான்காம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் மோ.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறுபான்மை ஆணைய துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் திராவிட மாடல அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். இதில் பா.சிட்டிபாபு, இ.குருதாஸ், முரசொலி மூர்த்தி, வி.எஸ்.நேதாஜி, ஆர்.கோபால், எம்.ரவி, கீதாமுனுசாமி, ஏகாம்பரம், நீலாவதி ராஜேந்திரன், என்.சீனிவாசன், தீனேஷ்குமார், களம்பாக்கம் பன்னீர் செல்வம், டாக்டர் ஜி.தினேஷ், எஸ்.பன்னீர், புருஷோத்தமன் , சாரதி, சண்முகம், ரத்தினவேல், டாகடர் முரளி, தயாளன் , மேகநாதன், முருகேசன், ஜெயவேல், முரளி, ராஜா , டானியல், தமிழ் மொழி, கே.பி.எஸ். கார்த்திகேயன் , சதாசிவம், மணிகண்டன், கவியரசு, உ.சரத்பாபு, மதன்ராஜ், எம்.ஆர்.மனோஜ், எம்.சக்திதாசன், சிலம்பு, ஜி.பி.பி.பீரவீன்குமார், கே.ராஜ்பாபு, ஏ.அருண், உள்பட பலர் பங்கேற்றனர்.

### மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும்

# ஒன்றிய அரசு எனும் மதயானையை அடக்கும் அங்குசமாக செயல்படுகிறார் முதல்வர்!

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!



சென்னை, மே.20-

மாநில அரசுகளின் உரிமைகளை பறிக்கும் ஒன்றிய அரசு எனும் மதயானையை அடக்கும் அங்குசமாக செயல்படுகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில அரசின் உரிமைகளை மீட்டெடுப்பதில் மற்ற மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் முன்னோடி முதலமைச்சராகத் திகழ்கிறார். அதற்கு உதாரணம் அன்மையில் பல்கலை கழக வேந்தராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சரே இருப்பார்கள் என்றும் ஒரு மாநில சட்டப் பேரவையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு ஏற்றப்படும் தீர்மானத்திற்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க வேண்டும்.

இதுவே அரசியல் அமைப்பு சட்டம் தெரிவிக்கிறது என வரலாற்று தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கி ஆளுநர் ஒப்புதல் அளிக்க மறுத்த மசோதாக்கள் நிறைவேறியதாக அறிவித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசிற்கே முழு அதிகாரம் உள்ளது என்பதை நீதியரசர்களின் தீர்ப்பு பறைசாற்றி உள்ளது.

எந்த மாநில முதலமைச்சருக்கும் இல்லாத வல்லமை நம் முதலமைச்சரையே சாரும் 'தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்' என்ற தாரகமந்திரத்தை ஏற்று போராடும் முதலமைச்சர் அவர்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்

முதலமைச்சர் அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர் என்பதை ஏதோ நாம் தாரை தப்பட்டை அடித்துக் கொண்டு சொல்லவில்லை. உச்சநீதி மன்ற மேனாள் நீதியரசர் கோபால கௌடா அவர்களே பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதிய 2020 புதிய கல்விக் கொள்கை எனும் மத யானை புத்தக வெளியீட்டு விழாவில் பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளைப் பாராட்டியுள்ளார். அதாவது ஒன்றிய அரசின் அடக்குமுறையை தட்டி கேட்பதில் டைனாமிக் சீப் மினிஸ்டர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மிக உறுதியானவராக திகழ்கிறார். அதற்கு உதாரணம் அண்மையில் தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து வென்றெடுத்து பல்கலைகழக வேந்தர்களை மாநில அரசே நியமிக்கலாம் என்ற மாபெரும் தீர்ப்பு பெற்றுத்தர எந்த முதலமைச்சருக்கும் வராத துணிச்சல், வீரம் மிக்க செயல்பாட்டாளர், ஒன்றிய அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மட்டுமே.

இன்று இந்தியாவே திரும்பி பார்க்கும் முதலமைச்சராக திகழ்கிறார். அதேபோன்று துடிப்பு மிக்க இளைஞராக செயல்படும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் பாராட்டுக்கள் என தெரிவித்த தருணம் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கமே கை தட்டலில் அதிர்ந்தது.

மாநில அரசின் உரிமைகளை பறிக்கும் ஒன்றிய அரசு எனும் மதயானையை அடக்கும் அங்குசமாக திகழ்கிறார் என்பதற்கு முன்னாள் நீதியரசர் கோபால கௌடா அவர்களின் உரையே சாட்சி.

இவ்வாறு சா.அருணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முல்லைப் பெரியாறு அணையைப் பராமரிக்க – மரங்களை வெட்ட

# தமிழ்நாடு அரசுக்கு 4 வாரங்களில் அனுமதி வழங்க வேண்டும்!

## ஒன்றிய சுற்றுச்சூழல் துறைக்கு – உச்ச நீதிமன்றம் உத்தரவு!

டெல்லி, மே.20-

முல்லைப்பெரியாறு அணையில் தமிழ்நாடு அரசு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மரங்களை வெட்டுவதற்கு ஒன்றிய மற்றும் கேரள அரசுகள் 4 வாரங்களில் அனுமதி வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைப்பெரியாறு அணையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க கேரள அரசுக்கு உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "முல்லைப் பெரியாறு அணை யில் பராமரிப்பு பணிகளுக்காக மரங்களை வெட்டுவதற்கு கேரளா முன்பு அனுமதி வழங்கியது. ஆனால் தற்போது, ஒன்றிய அரசின் சுற்றுச் சூழல் அனுமதி கோர வேண்டும் என கேரளா தெரிவிக்கிறது" என்று கூறினார்.

இதனை பதிவு செய்து கொண்ட உச்சநீதிமன்றம், "முல்லைப்பெரியாறு அணையில் தமிழ்நாடு அரசு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மரங்களை வெட்டுவதற்கு ஒன்றிய மற்றும் கேரள அரசுகள் 4 வாரங்களில் அனுமதி வழங்க வேண்டும். ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் அனுமதியை கால நிர்ணயம் செய்து அளிக்குமாறு உத்தரவிடுகிறோம். மராமத்து பணிகளுக்கு பொருள்களை கொண்டு செல்ல வள்ளக்கடவு சாலையை சுற்றுசூழல் பாதிக்காதவாறு 4 வாரங்களில் கேரள அரசு சீரமைக்க வேண்டும். சாலை செப்பனிடும் பணியின் போது தமிழ்நாடு அரசின் அதிகாரி உடன் இருக்கவும் அனுமதி வழங்குகிறோம். பராமரிப்பு பணிகளுக்காக தமிழ்நாடு இரண்டாவதாக ஒரு படகை பயன்படுத்த கேரள அரசு அனுமதி வழங்க வேண்டும். எஞ்சிய பிரச்சனைகள் குறித்து முடிவு செய்ய மேற்பார்வை குழு 4 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும்.

இவ்வாறு உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் – மாவட்ட

# வளர்ச்சி ஒருங்கிணைப்பு - கண்காணிப்புக் குழுக் கூட்டம்!

## அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் முன்னிலை! குழுத்தலைவர் ச.முரசொலி எம்.பி. தலைமை!

தஞ்சாவூர் ,மே.20-

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் (DISHA) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் முன்னிலையில், கண்காணிப்புக் குழுத்தலைவர் / தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, கண்காணிப்புக் குழு இணைத் தலைவர் / மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர். சுதா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். மு.பாலகணேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினர் சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், க.அன்பழகன், என்.அசோக்குமார், மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் குழுத்தலைவர் மற்றும் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி பேசியதாவது:-

தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து கண்காணிக்கும் பொருட்டு மாவட்டந்தோறும் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் இன்று இக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட தொழில் மையம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, மின்சார வாரியம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி, சுகாதாரத் துறை, மாவட்ட தொழில் மையம், மாவட்ட உணவு பொருள் வழங்கல், சமூக பாதுகாப்புத் திட்டம், புவியியல் மற்றும் சுரங்கத் துறை, சத்துணவு திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், மறுவாழ்வு நலத்துறை, நில அளவை பதிவேடுகள் துறை, குடிநீர் வடிகால் வாரியம், டிஜிட்டல் இந்தியா, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், பாரத் சன்சார் நிகாம் லிமிடெட், ஆகிய துறைகளின் பணிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், அரசு திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், தூய்மை இந்தியா இயக்கம், தேசிய ரூர்பன் இயக்கம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டம், பிரதம மந்திரி கிராம முன்னோடி திட்டம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம், தெற்கு இரயில்வே துறை, தேசிய நெடுஞ்சாலைத் துறை, பாரத் சன்சார் நிகாம் லிமிடெட், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டங்கள். மாவட்டதிறன் பயிற்சி திட்டம், வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், விதை கிராம திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், தமிழ்நாடு பருப்பு சாகுபடி திட்டம், கூட்டு பண்ணை திட்டம், தமிழ்நாடு பசல் பீமா யோஜனா திட்டம், பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம், பாரம்பரிய வேளாண் அபிவிருத்தி திட்டம், தமிழ்நாடு மின்வாரிய திட்டங்கள், பள்ளிக் கல்விதுறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மாற்று திறனாளிகள் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், குடிசைமாற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் மூலம் செயல்படுத்தப்படும் புராதன நகர வளர்ச்சி திட்டம், அம்ரூத் திட்டம், சீர்மிகு நகரம் திட்டப் பணிகள், சுகாதாரத்துறை மூலம் செயல்படுத்தப்படும் தொற்றா நோய்கள் திட்டம் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், மின்னனு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம், சுரங்கப் பகுதிகளால் பாதிக்கப்பட்ட பணிகளுக்கான பாரத பிரதமர் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் டிஜிட்டல் இந்தியா திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அவற்றின் களப்பணிகளை நல்ல முறையில் செயல்படுத்தப் பட வேண்டும்.

இந்த ஆய்வில் ஊரக வளர்ச்சித் துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளையும் விரைவாகவும் தரமாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது என தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாக ராஜன், அனைத்து நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.சோமு (எ) சோமசுந்தரம்

**மே 20 (2024)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் பணியாற்றத் தொடங்கியவர்.

புதுச்சேரி மாநிலத்தில் கிளைச் செயலாளர், தொகுதி துணைச் செயலாளர், அணியின் புதுச்சேரி மாநில துணைச் செயலாளர், செயலாளர், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் ஆகிய கழகப் பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.


கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தேசமுத்துக்குமார்

**மே 20 (2021)**



இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதி பிரதிநிதியாகவும், வட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**